# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI

## S.C. No. 434/ 2016

Deposition of witness for PW3

Name : குழந்தைவேல்

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.07.2026

---

எதிரி தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

**முதல் விசாரணை:-**

நான் உத்தரப்புரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ 1.** வழக்கு விபரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ 2.** அதில் என்ன கைப்பற்றினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னுடன் சேர்ந்து வேறு யாரும் கையெழுத்து போட்டார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 14.01.2011ம் தேதி காலை 10.45 மணியளவில் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த இருளப்பன் மகன் லட்சுமணன் என்பவரும் குருசாமி மகன் பாண்டி வீட்டின் முன்பு பேசிக்கொண்டிருந்த போது எழுமலை காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்படி வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வைமகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் 1வது கையொப்பம் செய்தேன் என்றும், பின்னர் குருசாமி காலி இடத்தில் சீமைக்கருவேல மரம் அருகில் அருவாள் ஒன்று எங்கள் இருவர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், அதை தாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையில்

கூறிவிட்டு எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.30 18:08:57 +0530

**Assistant Sessions Judge,**
**Usilampatti.**